<u>ம.அ.7./ப.து./00375/2007.</u>
<u>ஆணையாளர் அவர்களின் 04.02.2009 நாளிட்ட குறிப்பு</u>

<u>23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :74/2009 பொருள் எண்.28

<u>தானப்பத்திரம்</u>

மண்டலம்–7, வார்டு–110, கதவு எண்.16, கிரீம்ஸ் சாலையில் கீழ்தளம் + தரைதளம் + 8 தளம் + 9வது தளம் (பகுதி) நிர்வாக கட்டிடம் மற்றும் பகுதி நிலையம் (Sub station) கட்டுவதற்கு பொது மேலாளர் (வளர்ச்சி) BSNL, எத்திராஜ் சாலை, சென்னை–600 008 அவர்களுக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திட்ட அனுமதி வழங்கும் போது அதில் சாலை விரிவாக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தை சென்னை மாநகராட்சியிடம் தானப்பத்திரம் மூலமாக வழங்கப்பட வேண்டுமென்று ஒரு கூறு உள்ளது. அவ்வாறு வழங்கிய பின்னர் சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாலை விரிவாக்கத்திற்கு எடுக்கப்படும் நிலம் மேம்படுத்துவதற்காக விண்ணப்பதாரர் ரூ.2,97,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்)ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்தி உள்ளார். இது சம்பந்தமாக வரைவு தானப்பத்திரம் சட்ட அலுவலர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சாலை விரிவாக்கத்திற்கு எடுக்கப்படும் நிலத்தை தானப்பத்திரம் மூலமாக ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு விண்ணப்பதாரரின் செலவில் பதிவு செய்வதற்கும்;
2. விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தோராய அபிவிருத்தி கட்டணம் ரூ.2,97,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்)–க்கு பின்னேற்பு வழங்கவும்;
3. சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தினை குறியீட்டு, அதிலுள்ள மதில் சுவர் மற்றும் கட்டிடங்களை விண்ணப்பதாரரின் செலவில் இடிக்கவும்;

நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ 18.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.1/2009, நாள்: 18.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பது.ந.க.எண்.150/2009.
ஆணையர் அவர்களின் 16.02.2009 நாளிட்ட குறிப்பு

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :75/2009 பொருள் எண்.29

## ஐரோப்பா குழு நகர்புற அபிவிருத்தி திட்டம்

ஐரோப்பா குழு (European Commission) திட்டத்தின் நோக்கம் நகர்புற அபிவிருத்தி, குறிப்பாக கடலோர நகரங்களை குறித்து ஒரு தீர்வு ஏற்படுத்தி அதன் மூலம் நகர்புற அபிவிருத்தி வினைமுறைத் திறம் உருவாக்குவது என திருவாளர்கள். வியோலியா வாட்டர் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மண்டல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(To propose innovative and responsible solutions for sustainable Urban Development, particularly coastal cities which will facilitate implementation of local sustainable Urban Development Strategy)

இத்திட்டத்தில் சென்னை நகரை ஆய்வு செய்வதற்காக (Case Study) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள். வியோலியா என்விராயன்மெண்ட் என்ற நிறுவனம் ஐரோப்பா ஆணையத்திற்கு வழிகாட்டும் நிறுவனமாக உள்ளது.

இத்தகவலை குறிப்பிட்டு திருவாளர்கள்.வியோலியா வாட்டர் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் சென்னை மாநகராட்சிக்கு ஒரு அழைப்பு அனுப்பியுள்ளது. அதில் திருவாளர்கள். வியோலியா என்விராயன்மெண்ட், சென்னை மாநகராட்சியை இத்திட்டத்தில் சேர்வதற்காக விருப்ப கடிதம் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் சுருக்கம், அழைப்பு கடிதத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- கடலோர நகரங்களின் முறை மற்றும் அறைகூவு புரிந்து கொள்ளுதல்,
- சான்று மற்றும் நிகழிடம் – புதிய தீர்வு அடையாளம் கொள்ளுவதை அடிப்படையாக கொண்டு,
- தகவல் ஒருங்கிணைத்தல் மற்றும் மாற்றல் குறித்து,

மேலும், இது சம்பந்தமாக நேரிடையாக ஏதும் நிதி கொடுக்க தேவையில்லை என்றும்; ஆனால், சென்னை மாநகராட்சியை பற்றி பொது செய்தி மற்றும் தொழில்நுட்ப விவரம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இதுகுறித்து இத்திட்டத்தை அரசிடம் அனுப்பி ஒப்புதல் பெறுவதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ 18.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.3/2009, நாள்: 18.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ப.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.5.ந.க.எண்.பி1/193/1/2009

ஆணையாளர் அவர்களின் 17.02.2009 நாளிட்ட குறிப்பு

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :76/2009 பொருள் எண்.30

**ஒப்பம் – ஒப்புதல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | : | டாக்டர். விஸ்வேஸ்வரய்யா கோபுர பூங்காவில் உள்ள ‘‘டவர் பிளாசா’’–வை மேம்படுத்தும் பணி |
| 2. | மதிப்பீட்டுத் தொகை | : | ரூ.1,31,00,000/– |
| 3. | மதிப்பீடு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்ற தீர்மான எண்.22/2009, நாள் 27–1–2009 |
| 4. | பணித் தொகை | : | ரூ.1,08,76,195/– (Excluding L.S. Amount of Rs.1,06,600/-) |
| 5. | ஒப்ப நாள் | : | 13-2-2009 |
| 6. | ஒப்பம் பெறப்பட்ட விவரம் | : | இரண்டு ஒப்பம் |
| 7. | ஒப்ப விலைப்புள்ளி விவரம் | : | (see below) |
| 8. | பேச்சுவார்த்தைக்குப்பின் இறுதி ஒப்பத்தொகை | : | ரூ.1,19,63,815/– |
| 9. | 2008–09ம் ஆண்டு அலுவலக விலைப்படி ஒப்ப சதவிகிதம் | : | (+)10.00% |
| 10. | 7–2–2009 நாளன்று உள்ள சந்தைவிலைப்படி ஒப்ப சதவிகிதம் | : | (-) 1.69% (ஒன்று புள்ளி ஆறு ஒன்பது சதவிகிதம் குறைவு) |
| 11. | வார்டுகுழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | : | 5வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.1, நாள் 16–2–2009 |

Item 7 – ஒப்ப விலைப்புள்ளி விவரம்:

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பத் தொகை ரூ. | ஒப்பம் சதவீதம் (2008–09 விலைப்படி) |
|---|---|---|---|
| 01. | திரு.ஆர். ராமாராவ் | 1,26,81,643/- | (+)16.60% |
| 02. | திருவாளர்.வி.ஆர்.கே.பில்டர்ஸ் | 1,19,63,815/- | (+)10.00% |

எனவே, டாக்டர். விஸ்வேஸ்வரய்யா கோபுர பூங்காவில் உள்ள ‘‘டவர் பிளாசா’’–வை மேம்படுத்தும் பணி செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். வி.ஆர்.கே. பில்டர்ஸ் அவர்களிடம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளதால் ஏற்கனவே அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.1,19,63,815/–க்கு (அதாவது 2008–09ம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+)10.00% அதிகம் மற்றும் தற்போதைய 7–2–2009 நாளிட்ட சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)1.69% குறைவு ஆகும்)

எனவே, திருவாளர்.வி.ஆர்.கே. பில்டர்ஸ் அவர்களுக்கு ரூ.1,19,63,815/–க்கு (2008–09ம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+)10.00% அதிகம்) இப்பணியை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2009 அன்று தீர்மான எண். 30/09–ன் படி நிலைக்குழு (பணிகள்)–வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)–வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2009 அன்று தீர்மான எண்.40/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.5.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/3986/2001**
**ஆணையாளரின் 19.2.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :77/2009 பொருள் எண்.31

**சாலை பெயர் மாற்றம் மற்றும் திருவுருவ முழுச் சிலை அமைக்க அனுமதி**

சென்னை மாநகராட்சியின் முக்கிய சாலைகளான திருவொற்றியூர் நெடுஞ்சாலை, அல்லது புரசைவாக்கம் நெடுஞ்சாலை அல்லது சாந்தோம் நெடுஞ்சாலை, அல்லது வாலாஜா சாலை ஆகியவற்றில் ஒன்றிற்கு மக்கள் தலைவர் ஐயா ஜி.கே.மூப்பனார் சாலை என பெயர் மாற்றம் செய்திட மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு (மன்றத் தீர்மான எண்.493/2001, நாள் 18.9.2001) அரசுக்கு 24.9.2001 நாளிட்ட கடிதம் மூலம் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. அரசாணை பெறப்படவில்லை.

இந்நிலையில் 17.2.2009 நாளிட்ட கடிதத்தில், எதிர்க்கட்சித் தலைவர் திரு. சைதை பி. ரவி அவர்கள் மக்கள் தலைவர் திரு.ஜி.கே.மூப்பனார் அவர்களின் சேவையை போற்றும் வகையில் அண்ணா சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில், செனடாப் சாலையில் அவரது திருவுருவ முழுசிலையை வைக்கவும், புரசைவாக்கம் நெடுஞ்சாலைக்கு ஜி.கே.மூப்பனார் சாலை என பெயர் மாற்றம் செய்திடவும், மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி அரசின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

புரசைவாக்கம் நெடுஞ்சாலை மண்டலம்–5 மற்றும் மண்டலம்–7 ஆகிய மண்டலங்களின் பகுதிகளில் வருவதாலும் அண்ணா சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பு மண்டலம்–8ன் பகுதியில் வருவதாலும், இம்மண்டலங்களின் வார்டு குழுக்களின் ஒப்புதலும் பெறப்படவேண்டியுள்ளது. இருப்பினும், இந்த மூன்று மண்டலங்களின் வார்டு குழுக்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு புரசைவாக்கம் நெடுஞ்சாலைக்கு ஜி.கே.மூப்பனார் சாலை என பெயர் மாற்றம் செய்யவும், அண்ணாசாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில் செனடாப் சாலையில் மக்கள் தலைவர் திரு.ஜி.கே. மூப்பனார் அவர்களின் திருவருவ முழுச் சிலையை வைக்கவும், இது குறித்து அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பவும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு வார்டு குழு தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 19.02.2009 அன்று தீர்மான எண்.42/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(தூ.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :78/2009 பொருள் எண்.32

**சிலை நிறுவுதல்**

கன்னட பாலகா (பதிவு) மற்றும் பெங்களூர் தமிழ் சங்கத் தலைவர்கள் கன்னட கவிஞர் சர்வாக்னா (SARVAGNA) அவர்களின் திருவுருவச்சிலையை சென்னை அயனாவரம் யுனைடெட் இந்தியா குடியிருப்பிலுள்ள சென்னை மாநகராட்சி பூங்காவில் நிறுவ அனுமதி கோரியதை அப்போது நடைமுறையிலிருந்த அரசு ஆணைகளின் அடிப்படையில் பரிசீலித்து, 26.02.1998 நாளிட்ட 114/98 எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தில் அயனாவரம் கிராமம், புல எண்.75, பகுதி–17 சென்னை மாநகராட்சி தனி நிலத்தில் உள்ள பூங்காவில் (யுனைடெட் இந்தியா குடியிருப்பு) கன்னட கவிஞர் சர்வாக்னா (SARVAGNA) அவர்களின் திருவுருவச்சிலையை நிறுவ தலைவர், பெங்களூர் தமிழ் சங்கத்தினருக்கு சென்னை மாநகராட்சி மன்றம் அனுமதி வழங்கியது.

இது தொடர்பாக அரசின் ஆணை கோருவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அரசாணை (நிலை) எண்.186, நாள் 21.09.1998–ல் அரசாங்கமோ அல்லது தனிப்பட்ட நிறுவனங்களோ எந்த தலைவருக்கும் சிலை நிறுவுதல் கூடாது என்பது உள்ளிட்ட அறிவுரைகள் வழங்கப்பட்டதால், இது தொடர்பாக மேல்நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

தற்போது 16.02.2009 நாளிட்ட அரசு செயலாளர், ந.நி.ம.கு.வ.துறை அவர்கள் தனது நேர்முக கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர், கர்நாடக அரசு அவர்கள், அயனாவரம் பூங்காவில் கன்னட கவிஞர் சர்வாக்னா (SARVAGNA) அவர்களின் திருவுருவச்சிலை நிறுவுவதற்கான இடம் குறித்து திருப்தி அடைந்துள்ளதாகவும், மேற்படி இடத்தேர்வு கர்நாடக அரசுக்கு ஏற்புடையது என்றும் தெரிவித்து கடிதம் அனுப்பி உள்ளதாக தெரிவித்து, அயனாவரத்தில் மேற்படி இடத்தில் கன்னட கவிஞர் சர்வாக்னா அவர்களின் திருவுருவச்சிலையை நிறுவுவதற்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கு அரசு விரும்புவதாகவும் தெரிவித்து, இந்நிகழ்வில் மன்றத்தின் அனுமதியை பெற்று அரசின் ஒப்புதலுக்காக கருத்துரு அனுப்புமாறு தெரிவித்துள்ளார்.

20.11.1998 நாளிட்ட, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநிநி) துறை, அரசாணை (நிலை) எண்.221–ல் சிலை நிறுவுவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

(1) சிலை, நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை எதுவாயினும், அதை அமைப்பதற்கு அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்.

(2) ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை பொறுத்தமட்டிலும், அவற்றை நிறுவியவர்களே (அவற்றை அமைத்த சங்கம், பிரிவு, தனிப்பட்டவர் போன்றவர்) அவைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(3) ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகள் சீர்குலையாமலிருக்க, அச்சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவது தேவையெனக் கருதப்பட்டால், இதுகுறித்து அரசிடம் ஆணை பெற்றபின் சம்பந்தப்பட்ட தனிநபர், அமைப்பு போன்றவற்றால் மாற்றி அமைக்கப்படலாம்.

அரசு செயலரின் 16.2.09 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ள, கன்னட பாலகா (பதிவு), சென்னை மற்றும் பெங்களூர் தமிழ் சங்கங்கள் கோரியபடி, சென்னை அயனாவரம் யுனைடெட் இந்தியா குடியிருப்பிலுள்ள சென்னை மாநகராட்சி பூங்காவில் (அயனாவரம் கிராமம், புல எண்.75, பிளாக் 17, சென்னை மாநகராட்சி தனி நிலத்தில் உள்ள பூங்கா) கன்னட கவிஞர் சர்வாக்னா (SARVAGNA) அவர்களின் திருவுருவச்சிலையை மேற்படி கன்னட பாலகா (பதிவு) சங்கத்தின் செலவில் நிறுவ அனுமதி அளித்திடவும், இதுகுறித்து அரசாணை பெற அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பிடவும் அனுமதி வேண்டி மன்றத்திற்கு (வரிவிதிப்பு மற்றும் நிதி) நிலைக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு வார்டு குழு தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 19.02.2009 அன்று தீர்மான எண்.41/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்